[14th December 1959

Minimum wages

* 159 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் ஆண்டு நடந்த பதினைந்தாவது இந்தியத் தொழிலாளர் மகாநாட்டில் செய்த சிபாரிசுகளின் அடிப்படையில் எந்தத் தொழிற்சாலையிலாவது குறைந்த அளவுக்கூலி விதங்கள் மாற்றியமைக்கப்பட்டனவா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No Sir. After the Indian Labour Conference made its recommendation in its 15th session held in July 1957 and till now, the Government have not revised the minimum wages already fixed for any employment.

* 160 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is a proposal for revision of minimum wages prescribed prior to 31st March 1956 in the light of the increased cost of living?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri V. K. KOTHANDARAMAN : வருடாவருடம் 10,000 ரூபாய் செலவில் லேபர் கான்பெரென்ஸை நடத்தினாலும் அதில் செய்யப்படும் முடிவுகளை அமல் நடத்தவில்லையானால், எதற்காக அந்த மகாநாட்டை நடத்த வேண்டும்? அந்த மகாநாட்டை நடத்துவதால் என்ன பயன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மூலக் கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கும் கான்பெரென்ஸ் அகில இந்திய லேபர் கான்பெரென்ஸ். அது ஏன் நடத்தப்படவேண்டும் என்ற கேள்விக்கு நான் பதில் சொல்வதிற்கில்லை. அதை நடத்த எவ்வளவு ரூபாய் செலவாகிறது என்றும்—10,000 ரூபாய் செலவாகிறது என்றும்—நான் சொல்வதற்கில்லை. லேபர் கான்பெரென்ஸில் செய்யப்படும் முடிவுகள் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டுத்தான் வருகின்றன. அவை குறித்த காலத்தில் நிறைவேற்றப்படும். இந்தக் கான்பெரென்ஸில் செய்யப்பட்ட முக்கியமானதொரு முடிவு, தொழிலாளிகளின் தேவைக்கு உகந்தவாறு குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது ஆகும். இது ஒரு புதிய கொள்கை. அப்போதைக்கப்போது ஒவ்வொரு தொழிலாக எடுத்துக் கொள்ளப்பட்டு இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri S. PAKKIRISAMI PILLAI : குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கும் கமிட்டியின் ஒரு முக்கிய நோக்கம், அந்த அந்தக் காலத்திற்கேற்ப குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்க